## இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்கல்விச் (எச்ஈரீசீ) செயற்திட்டம் - 2013

இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்கல்விச் (எச்ஈரீசீ) செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 4686 – எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 பீ(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி என்பன

எச்ஈரீசீ செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். சமத்துவமான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி தேவைகளுக்கு இணைந்ததாக தரமான உயர்கல்விச் சேவைகளை வழங்குவதற்கு நலன் பெறுனர்களின் உயர்கல்வி முறைமை, நிறுவனங்கள், மனித வளங்கள் என்பவற்றின் இயலுமையினை மேம்படுத்துதலே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உயர்கல்வித் துறைக்கான நிறுவனமயப்படுத்திய நியதிகள், கற்பித்தல் மற்றும் கற்றலின் பொருத்தத்தன்மை மற்றும் தரத்தினை மேம்படுத்துதல் மாற்று உயர்கல்வியினை விரிவுபடுத்தலும் கண்காணித்தலும், மதிப்பீடு செய்தல், ஆய்வு செய்தல், ஒருங்கிணைத்தல் தொடர்பாடல் ஆகிய நான்கு பிரதான கூறுகளை செயற்திட்டம் உள்ளடக்கியுள்ளது. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் யூஎஸ் டொலர் 40 மில்லியனாக உள்ளதுடன் மொத்த தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2010 நவம்பர் 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்

பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் உடன்படிக்கைகயின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் படி மீள்நிரப்பல்களுக்காக விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கணக்காய்வு செய்யப்படாத நிதி அறிக்கைகள் (ஐயூஎப்ஆர்) போதியளவில் நம்பிக்கை வைக்கக்கூடியவை என்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டக் கூறுகளின் செலவுகள் ரூபா 874,456,231 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 1,780,679,075 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பினை பின்வரும் கூற்றில் தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவுகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா | ரூபா |
| **உயர் கல்வித் துறைக்கான நிறுவனமயப்படுத்தல் குறிகாட்டிகள்** | | | |
| உயர் கல்வித் துறைக்கான தேசிய உயர்கல்வி தகைமைக் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் | 171,360 | 762,288 | 2,709,470 |
| முழு உயர்கல்வித் துறைக்கான தரக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைமையினைத் தாபித்தல் | 8,894,566 | 9,551,965 | 29,264,998 |
| **கற்பித்தல் மற்றும் கற்றலின் தரத்தினை மேம்படுத்துதல்** | | | |
| பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம் | 319,305,073 | 206,152,021 | 562,301,115 |
| தரம் மற்றும் புத்துருவாக்கல் மானியம் | 113,500,393 | 9,513,189 | 123,013,582 |
| **மாற்று உயர் கல்வியினை விரிவாக்கலும் வலுப்படுத்தலும்** | | | |
| இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்தினை நவீனமயப்படுத்தல் | 20,057,993 | 9,380,984 | 37,108,797 |
| உயர் தொழில்நுட்பக் கல்வியினைப் பெற்றுக்கொள்வதன் பிராந்திய சமத்துவத்தினை மேம்படுத்துதல் | 116,489,022 | 178,452,093 | 308,858,850 |
| **மனித வள அபிவிருத்தி, கண்காணிப்பு, கல்வி ஆய்வுகள், ஒருங்கிணைப்பு, தொடர்பாடல் என்பன** | | | |
| கல்வி முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப பதவியணியினரின் மனிதவளங்களை அபிவிருத்தி செய்தல் | 124,013,690 | 115,469,828 | 272,137,517 |
| கொள்கை கற்கைகள், ஆராய்ச்சி கண்காணிப்பு, மதிப்பீடு, ஒருங்கிணைப்பு, தொடர்பாடல் என்பன | 172,024,134 | 126,351,924 | 445,284,746 |
| **மொத்தம்** | **874,456,231** | **655,634,292** | **1,780,679,075** |

## 4.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், விசேட (டொலர்) கணக்கு (துணைப் பேரேட்டுக் கணக்கு இல. 154) செயற்திட்ட நோக்கத்திற்காக (இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்கல்விச் (எச்ஈரீசீ) செயற்திட்டம்) இலங்கை மத்தியவங்கியில் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதான விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

| | யூஎஸ் டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2.494.438 | 317.194.719 |
| கூட்டு :- | | |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து மீள்நிரம்பல் | 8,680,987 | 1,124,091,268 |
| வெளிநாட்டு நாணய மீள்பெறுமதியிடல் | - | 9,708,815 |
| கழி :- | | |
| பற்றுதல்கள் | 6,516,872 | 841,874,969 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 4,658,553 | 609,119,833 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட இரு வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,440,000 கூட்டுமொத்தத்தொகையான வாடகைக் கட்டணம் ஏற்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்ட நோக்கங்களுக்காக உரிய வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டமைக்கான ஆவணச் சான்றுகள் எதுவும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

உள்ளபடியான நிதியப் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**நிதியப் பயன்பாடு**

| மூலம் | கடன் உடன்படிக்கையின் நிதியீட்டிற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டிற்கான நிதிப் பயன்பாடு | 2013 திசெம்பர் 31 வரையான நிதிப் பயன்பாடு | | நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ்டீ மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | யூ.எஸ்டீ மில் | ரூபா மில் | |
| ஐடீஏ | 40 | 4,650 | 890 | 841.87 | 14.06 | 1,780.68 | 38 |
| மொத்தம் | 40 | 4,650 | 890 | 841.87 | 14.06 | 1,780.68 | |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்குறித்த தகவலின் படி, செயற்திட்டக் காலப்பகுதியின் 61 சதவீதம் கடந்ததை அடுத்து ஒதுக்கப்பட்ட நிதிகளின் 38 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. துரித நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட்டிராமையால் மிகுதிச் செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட முடியவில்லை.

(ஆ) கீழே விபரிக்கப்பட்டவாறு நிதிச் செயலாற்றல் மீதான திருப்திகரமான முன்னேற்றம் ஏனைய கூறுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | ஒதுக்கீடு | 2013 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான செலவுகள் | நிதிப் பயன்பாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | சதவீதம் |
| உயர் கல்வித் துறைக்கான தேசிய உயர் கல்வித் தகைமை கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் | 650,000 | 171,360 | 26 |
| முழு உயர் கல்வித் துறைக்கான | 53,756,000 | 8,894,566 | 16 |

| | | | |
|---|---|---|---|
| முழுவதற்குமாக தரக் காப்பீட்டு பொறிமுறைமையினைத் தாபித்தல் | | | |
| தரம் மற்றும் புத்துருவாக்கல் மானியம் | 250,510,063 | 113,500,393 | 45 |
| இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவன நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தினை நவீனமயப்படுத்தல் | 90,000,000 | 20,057,993 | 22 |

(இ) i. உயர் கல்வியின் பொருளாதார இணக்கப்பாட்டை விருத்தி செய்வதற்கு சகல பல்கலைக்கழகங்களுக்கும் பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம் உதவுகின்றது. நான்கு ஆண்டுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளில், 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை 6 பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டின் பயன்பாடு ஆகக் குறைந்த இலக்கான 75 சதவீதத்திற்கு எதிராக 40 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது.

ii. நான்கு ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் வெளிவாரிப் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஆகக் குறைந்த இலக்கான 50 சதவீதத்திற்கு எதிராக 40 சதவீதத்திற்கும் குறைவாகவே 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையான 12 பல்கலைக்கழகங்களின் ஏற்பாட்டுப் பயன்பாடு காணப்பட்டது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உயர்கல்வித்துறைக்கான நிறுவனமயப்படுத்தல் நியதிகளின் கூறுகளின் கீழ் இலங்கையிலுள்ள உயர்கல்வித் துறையின் நிறுவகரீதியான கட்டமைப்பின் தேசிய தகைமைகள் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தலும் தரக் காப்பீட்டு முறைமையினைத் தாபித்தலும் 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். பல்கலைக்கழகங்களின் தலைவர்களுக்கு 2013 ஏப்ரல் 22 ஆம் திகதியிடப்பட்ட 5/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்

ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தேசிய தகைமைக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தி அமுலாக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் மேவுகைக்குட்பட்ட நிறுவனங்களுக்கு இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தால் விநியோகிக்கப்பட உள்ள இத்தகைய சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் 2014 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினை நவீனமயப்படுத்தலுக்காக செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் தலைமைத்துவம் மற்றும் தர அபிவிருத்தி நிலையத்தை (எல்கியூடீசீ) ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2013 மே 13 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டிய வவுனியாவில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கான ஓர் புதிய கட்டிட நிர்மாணிப்பு வேலைகள் 2014 ஏப்ரல் 30 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 இன் இறுதியில் தங்காலை மற்றும் இரத்தினபுரியில் புதிய உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் ஆய்வுக் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப் பட்டிருந்தது. எவ்வாறெனினும், கட்டிட நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்படுவதிலான தாமதங்கள் காரணமாக அத்தகைய நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு ஆரம்பிக்கப்பட முடியாதிருந்தன.

(இ) உயர் கல்வித் துறையின் மனித வள வலுப்படுத்துவதற்கு மனிதவள அபிவிருத்தி, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு, ஆய்வுக் கற்கை மற்றும் தொடர்பாடல் கூறின் கீழ் செயற்திட்டத்தால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்காக உயர் கல்விக்கான மானியங்கள்

வழங்கப்படுகின்றன. மேற்குறித்த கூறின் கீழ் மானியங்களைப் பெற்ற 05 பல்கலைக்கழகங்களின் 06 விரிவுரையாளர் 2013 இல் கற்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2014 ஏப்ரல் 30 வரையிலும் பூர்த்திசெய்திருக்கவில்லை.

(ஈ) ஆங்கிலம் மற்றும் தகவல்தொழில்நுட்பத்தில் பட்டப்படிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு ரூபா 8,543,252 கிரயத்தில் ஓர் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் அத்தகைய தகைமையைப் 7471 பட்டதாரி மாணவர்கள் பெற்றிருந்தாலும் 2177 பட்டதாரி மாணவர்கள் மாத்திரமே பேச்சுத் திறன் பரீட்சைக்குத் தோற்றி 1699 பட்டதாரிகளே சகல நான்கு தரங்களிலும் தகைமை பெற்றிருந்தனர்.

## 6.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்டத்தின் மூன்று ஆண்டு கால சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் உடனே பதவியை இராஜினாமாச் செய்த நான்கு ஊழியர்களுக்காக ரூபா 386,818 கூட்டுமொத்தத் தொகையான பணிக்கொடைப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.